Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 7 (8-11-65) இதழ் 269

விசுவாவசு ஐப்பசி 23 றஜபு பிறை 13 திங்கட்கிழமை

கண்ணைக் கவரும்
தங்க. வைர நகைகளுக்கு



போன் 585 PHONE 585
K. N. M.
மீரன் சாஹிப்
தங்கப்பவுண் நகை மாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

### எதிர்ப்பு வலுக்கிறது

நியுயோர்க், நவ. 27

இராணுவத்தில் சேர்வதற்கு பதிவு செய்யப்படும் தங்களது அடையாள அட்டைகளை ஐந்து அமெரிக்க இளைஞர்கள் நேற்று இங்கு தீயிட்டுக் கொளுத்தினர். இதனை சுமார் இரண்டாயிரம் பேர் பார்த்துக் கொண்டிருந்தனர். வியட்னும் மீதான அமெரிக்கா

( 6-ம் பக்கம் பார்க்க)

# தமிழ் மசோதாக்கள் தாமதிப்பது ஏன்?

## தமிழரசுக்கட்சியிடம் பிரமுகர்கள் கேள்வி

யாழ்ப்பாணம், திங்கள்

தமிழ்மொழி உபயோகச் சட்டத்தை அமுல் நடத்துவதற்கான விதிகளையோ, மாவட்டசபை மசோதாவையோ கொண்டு வருவதில் தேசிய அரசாங்கம் சுறுசுறுப்புக் காட்டவில்லையென்றும் இதில் இனியும் தாமதம் செய்யும் முயற்சியை தமிழரசுக்கட்சி அனுமதித்துக் கொண்டிருக்கக் கூடாதென்றும் தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த பிரமுகர்கள் பலர் தமிழரசுக் கட்சி மேலிடத்தைக் கேட்டுள்ளதாக அறியப்படுகிறது.

தேசிய அரசாங்கத்தின் முதலாவது வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டதும் தமிழ் உபயோகச் சட்டவிதிகள் கொண்டு வரப்படுமென்றும் அதையடுத்து மாவட்டசபைகள் மசோதா கொண்டுவரப்படுமென்றும் தேசிய அரசாங்கம் அமைக்கப்படும் பொழுது தமிழரசுக்கட்சிக்கு யு. என். பி. தலைவர்கள் உறுதியளித்ததாகவும் ஆனால் இந்த உறுதிமொழியைக் காப்பாற்ற இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லையென்றும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனராம்.

இவ்வருட இறுதிக்குள் தமிழ்மொழி உபயோகச் சட்டவிதிகளையும் மாவட்ட சபைகள் மசோதாவையும் கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகச் செய்திகள் கூறுகின்றபோதிலும் தமிழ் மொழிச்சட்ட மசோதா கொண்டுவரப்படாமலே தமிழ்பேசும் மக்களுக்கு உரிமைகள் வழங்கி அவர்களைச் சமாளிக்கலாமென அரசாங்கம் கருதுவதாகத்தெரிவதாகவும் தமிழ்பேசும் மக்களுக்கு சட்டரீதியாக உரிமைகள் அளிக்கப்படுவதற்குத் தமிழரசுக்கட்சி, அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டுமென்றும் கட்சிப் பிரமுகர்கள் தமிழரசு மேலிடத்தைக் கேட்டுள்ளதாகத் தெரிகிறது.

போயாதின விடுமுறைகள்பற்றி அவசர அவசரமாக மசோதா கொண்டு வந்துள்ள அரசாங்கம்தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் சம்பந்தப்பட்ட மசோதாக்களைக் கொண்டு வருவதில் அசிரத்தையாக இருப்பது ஏன் என்றும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளதாகத் தெரிகிறது.

தமிழரசுக்கட்சியின் அடுத்த ஆண்டு மகாநாட்டுக்குமுன் தமிழ்மொழி உபயோகச்சட்ட விதிகளும் மாவட்டசபைகள். மசோதாவும் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்பட்டுவிட வேண்டுமென்றும் இதற்கான உரிய நடவடிக்கைகளை தமிழரசுக்கட்சிப் பார்லிமெண்டரிக் குழு எடுக்க வேண்டுமென்றும் அவர்கள் கேட்டுள்ளதாகத் தெரிகிறது.

இந்திய - பாக்.

## பதற்றத்தை தணிக்கும் யோசனை பலனளிக்காது

### சுவர்ண்சிங் கருத்து

புதுடில்லி, நவ. 7

''இந்தியாமீது பாகிஸ்தான் தலைவர்கள் பகை உணர்வு கொண்டிருக்கிறார்கள் இக்கட்டத்தில் பதற்ற நிலையைத் தணிக்கும் யோசனை எதுவும் நல்ல பலனளிக்கமாட்டாது'' என்று இந்திய வெளிவிவகார மந்திரி சர்தார்சுவர்ண்சிங் தெரிவித்துள்ளார்.

நியுயோர்க்கிலிருந்து தாயகம் திரும்பிய சுவர்ண்சிங் இன்று காலை பாலம் விமான நிலையத்தில் நிருபர்களுக்குப் பேட்டி அளிக்கையில்தான் மேற்கண்டவாறு கூறினார்.

''பாகிஸ்தானுக்குச் சரியான தோல்வியேற்பட்டிருக்கிறது. செப்டம்பர் மாதம் 20ந் தேதி இயற்றிய தீர்மானங்களையே ஐ. நா. மீண்டும் வலியுறுத்தியுள்ளது. இதனைப் பாகிஸ்தான் இப்பொழுது வரவேற்றுள்ளது. ஆனால் பாகிஸ்தான் தனது தோல்வியை மூடி மறைக்கப்பார்க்கிறது. முந்திய தீர்மானங்களை வரவேற்பதென்றால் பாகிஸ்தான் மீண்டும் ஒருதடவை ஐ.நா. பந்தோபஸ்து சபையைக் காட்டியிருக்க தேவை இல்லையென்றும் சுவர்ண்சிங் கூறினார்.

## பொலிஸ் தலையீட்டினால் உணவு உற்பத்தி தடை

### கிளிநொச்சி எம். பி. கண்டனம்

கிளிநொச்சி, ஞாயிறு

கிளிநொச்சி கமங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களைக் கொண்ட கமத்தொழிலாளர் சங்கமொன்றை கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் ஆரம்பித்து வைத்துள்ளார்.

இச்சங்கத்தை தொடக்கி வைத்துப் பேசுகையில் திரு. கா. பொ. இரத்தினம் தெரிவித்ததாவது:

''இச்சங்கம் கமக்காரத் தொழிலாளரின் நல் வாழ்வுக்காகவும், கமங்களில் வேலை செய்யும் இந்திய குடும்பத்தினரை பொலிசார் சட்டவிரோதக் குடியேற்றக்காரர் என்ற போர்வையில் துன்புறுத்துவதை தடுத்து நிறுத்துவதற்கும் முயற்சி செய்யும்.

நீதி நியாயமின்றி கமத் தொழிலாளரை பொலிஸ் துன்புறுத்துவதால் அக்கமத் தொழிலாளர்கள் குடும்பங்கள் கஷ்டப்படுவதுமின்றி உணவு உற்பத்தி வேலைகளும் தடைப்படுகின்றன. கிளிநொச்சிக் கிளை செம்மையாக நிறுவியபின்னர் வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருக்கோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும் நிறுவப்படும்.

இச்சங்கத்தின் உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்

காப்பாளர்: கா. பொ. இரத்தினம், தலைவர்: வ. ந. அரசரத்தினம், செயலாளர்: எம். எஸ். மணியம், துணைச்செயலாளர்: ம. இருதயம், பொருளாளர்: டாக்டர். எஸ். அம்பலவாணர், உதவிப் பொருளாளர்: குப்புசாமி. 15 பேர் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

### அந்தகர்கள் அதிகரிப்பு

வாஷிங்டன், நவ 7

உலகில் குருடர்கள் தொகை வெகுவாக அதிகரித்துக்கொண்டு செல்கிறதென அறிவிக்கப் பட்டுள்ளது உலகிலுள்ள குருடர்களில் எண்பது சதவிகிதத்தினரின் வியாதிக்கான காரணம் இன்னும் தெரியவில்லை

(ராய்ட்டர்)

### புதிய தூதரகம்

கோலாலம்பூர். நவ. 7

மொரோக்கோவில் விரைவில் மலேசிய தூதராலயம் திறக்கப்படவிருப்பதாக இங்கு அறிவிக்கப்பட்டது.

(ராய்ட்டர்)

### புதிய தூதர்

பாரிஸ், நவ. 7

பிரான்ஸுக்கான புதிய இலங்கைத் தூதராக சர் லலிதா ராஜபக்ஷா நியமிக்கப்பட்டுள்ளார்

(பி. டி. ஐ.)

## கிராமசேவையாளர் பகுதிகள் பல பிரிக்கப்படும்

மாவிட்டபுரம், ஞாயிறு

அண்மையில் யாழ். செயலகத்தில் நடைபெற்ற மகாநாட்டில் சில கிராமசேவையாளர், காரியாதிகாரிகள் பகுதிகள் மாற்றியமைப்பது பற்றி சில முடிவுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

யாழ்ப்பாண கிராமசேவையாளர் பகுதியை இரண்டாகப் பிரிப்பதென கொள்கையில் ஏற்றுக்கொண்டு மார்ட்டின்கமிஷன் அறிக்கைவெளிவந்தபின்னர் இதுசம்பந்தமாக மேலும் நடவடிக்கை எடுப்பதென முடிவு செய்யப்பட்டது

வலிகாமம் மேற்கு காரியாதிகாரிப் பகுதியில் பண்ணாகம் பகுதிக்கு ஒரு கிராம சேவையாளரை நியமிக்க வேண்டுமென்ற கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது

இதைவிட இணுவில் உடுவில், சுண்ணாகம், அளவெட்டி, ஏழாலை ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகள் இரண்டாக பிரிக்கப்படுமெனவும் தெரியவருகிறது. இதேபோல கைதடி, கரணவாய் வடக்கு, பச்சிலைப் பள்ளி முதலிய பிரிவுகளும் இரண்டாக பிரிக்கப்படுமெனவும் தெரியவருகிறது.

கரைச்சிப்பகுதியில் 3 புதிய கிராமசேவைப்பகுதிகள் நிர்மாணிக்கப்படுமெனவும், வலி-வடக்கு காரியாதிகாரியின் பிரிவும் இரண்டாகப் பிரிக்கப்படுமெனவும்தெரிய வருகிறது வடமராட்சிக் காரியாதிகாரி பகுதியும் இரண்டாகப் பிரிக்கப்படவிருக்கிறது.

இந்த மகாநாட்டுக்கு யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு என். டி. ஜயவீரா தலைமை வகித்தார். யாழ்ப்பாணம் காரியாதிகாரி திரு. எஸ். சிவஞானம், தீவுப்பகுதிகள் காரியாதிகாரி திரு. பி, எல். பட்ரிக், நெடுந்தீவுக் காரியாதிகாரி திரு. எம். அந்தோனிமுத்து, வலிகாமம் வடக்கு காரியாதிகாரி திரு. முருகேசம்பிள்ளை, பச்சிலைப்பள்ளி காரியாதிகாரி, திரு. வி. கந்தப்பிள்ளை, தென்மராட்சிக் காரியாதிகாரி திரு. ஆர். சிதம்பரப்பிள்ளை, கரைச்சி காரியாதிகாரி திரு. எச். பி. பிள்ளைநாயகம், துணுக்காய் பதில் காரியாதிகாரி திரு. எம். ராஜரத்தினம், பூனகரி காரியாதிகாரி திரு. ஏ. கந்தையா, வலி கிழக்கு காரியாதிகாரி திரு. என். வேதாரண்யசேயன, வலிகாமம் மேற்கு காரியாதிகாரி திரு. எம். மாணிக்க நடராசா, வடமராட்சிகாரியாதிகாரிதிரு. ஏ. விஸ்வநாதன், காரியாதிகாரி டி. டபிள்யு செல்வரத்தினம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### ஒய்வு நாளிலே ஒரு நேரமாவது ...

சென்னை, நவ. 7

திங்கட்கிழமைகளில் பிற்பகல் மூன்று மணிக்குப் பின்னர். தமிழ் நாட்டிலுள்ள சாப்பாட்டுக் கடைகள், ஹோட்டல்கள், கிளப்புகள், சிற்றுண்டிச்சாலைகள் ஆகியவைகளில் சாப்பாடு எதுவும் பரிமாறப்படமாட்டாது. சென்னை அரசாங்கம் விடுத்திருந்த உத்தரவைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. நாளை திங்கட்கிழமையிலிருந்து இவ்வுத்தரவு அமுலுக்கு வருகிறது.

பிரதமர் சாஸ்திரியின் ''ஒரு நேர உணவைக் கைவிடுக'' இயக்கத்தைத் தொடர்ந்தே இது செயல்படுகிறது. உல்லாச பிரயாணிகள் இதனால் பாதிக்கப்படமாட்டார்கள்.

(பி. டி. ஐ.)

## மணிவாக்கு

அஞ்சாமையே எல்லா நற்குணங்களுக்கும் அதிநாயகன். வாழ்க்கை விசாலமானது. அதில் தங்கு தடையின்றிப் போய்க் கொண்டேயிருக்க வேண்டும். பணிவைக் கைவிடாதிருப்போமானால் ஆபத்து எதுவும் நேராது. — விநோபாபாவே

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 387

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஐப்பசி மீ 23 உ (8-11-65)

# அரசாங்கக் கட்சியும் வாழ்க்கைச் செலவு உயர்வும்

தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து எட்டு மாதங்களாகியும் வாழ்க்கைச் செலவு குறையாமல் மேலும் மேலும் விஷம்போல் ஏறி வருவதனால் அதிருப்தியடைந்த அரசாங்கக்கட்சியின் அங்கத்தவர்கள் பலர், அரசாங்கம் நிலைமையை உணர்ந்து நடந்து கொள்ள வேண்டிய அவசியத்தை வற்புறுத்தியின்றுக்கின்றனர். கடந்தகால அனுபவத்தைக் கொண்டு உண்மை நிலைமையை மந்திரிகளுக்கு உணர்த்தி, அவர்களின் குறைகளை இடித்துக் காட்ட வேண்டியது அரசாங்கக் கட்சியினரின் கடமை. அரசாங்கத்திலிருந்து கொண்டே வெளியில் பொதுமேடைகளில் அரசாங்கத்தைக் குறைகூறி மற்றவர்கள் நகைப்புக்கு இடம் கொடுப்பதைவிட — அரசாங்கக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி அதில் மந்திரிகளினதும் அரசாங்கத்தினதும் குறைகளை எடுத்துக் காட்டியதும் இதற்கு பிரதமர் சந்தர்ப்பம்ஏற்படுத்திக் கொடுத்ததும் இந்நாட்டில் ஜனநாயகம் வளர்ச்சி பெறுவதற்கு நல்ல அறிகுறியாகும்.

ஆனால் தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இதர கட்சிகளை விடுத்து ஐக்கியதேசியக் கட்சியினர் மட்டும் கொண்ட அரசாங்கக்கட்சியின் கூட்டம் மட்டுமே சென்ற சனிக்கிழமை நடைபெற்றது. வாழ்க்கைச் செலவு உயர்வு ஒரு கட்சிப் பிரச்னையல்ல. தேசிய அரசாங் சாங்கத்திலுள்ள கட்சிகள் மட்டுமல்ல எதிர்க் கட்சிகளின் ஒத்துழைப்பையும்கூட, நாட்டுமக்களின் நலன் கருதிப் பெற வேண்டிய விஷயம் இது. முன்னைய அரசாங்கங்களும் வாழ்க்கைச் செலவு உயர்வுப் பிரச்னையையும் இதர முக்கிய பிரச்னையையும் கட்சி அரசியல் பிரச்னையாக்கி கட்சிக் கண்ணோட்டத்துடனேயே கவனித்தன. இதனால் கட்சிக்குள்ளேயே கருத்து வேற்றுமைகளும் பிரிவுகளும் தோன்றின. பிரச்னைகள் மலைபோல் வளர்ந்து ஆட்சிபீடத்திலிருந்தே வெளியேற நேரிட்டது.

வாழ்க்கைச் செலவு உயர்வைக் குறைப்பதே தமது முதல் வேலையென தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் அறிவித்தது. அரசாங்கம் அதை மறந்துவிடவில்லை. எத்தனையோ குழுக்களையும் உபகுழுக்களையும் நியத்ததுடன் பல ஆலோசனைக் கூட்டங்களையும் நடத்தியிருக்கிறது. வாழ்க்கைச் செலவு உயர்வைக் குறைக்க ஒத்துழைப்புத் தருமாறு தனிப்பட்ட வர்த்தகர்களுக்கும் விவசாயிகளுக்கும் பொதுமக்களுக்கும் அரசாங்கம் வேண்டுகோள் விடுத்தது. முன்னைய அரசாங்கம் பறித்திருந்த சில உரிமைகளையும் சலுகைகளையும்கூட இந்த அரசாங்கம் தனிப்பட்ட வர்த்தகர்களுக்கு அளித்தது. ஆனாலும் பயன் என்ன? விலைவாசிகள் இன்னும் விஷம்போல் ஏறிக் கொண்டுதானிருக்கிறது.

அத்தியாவசியப் பொருள்கள் நியாயமான விலையிலும் தட்டுப்பாடில்லாமலும் கிடைக்க வேண்டுமென்பது தான் பொதுமக்களின் கோரிக்கை. அத்தியாவசியப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படவும், விலைவாசிகள் உயரவும் யார் சதிசெய்கிறார்கள்? யார் இதற்குக் காரணமென்பதைப்பற்றி பொதுமக்கள் கவலைப்படவில்லை. விலைவாசிஉயர்வை தடுப்பதும் பொருள்கள் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்க வழிசெய்ய வேண்டியதும் அரசாங்கத்தின் கடமை என்பதே பொதுமக்களின் கருத்து. எனவே விலைவாசி உயர்வு குறையாதவரையிலும் அத்தியாவசியப் பொருள்கள் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கும்வரையும் அரசாங்கக் கட்சிப் பிரதிநிதிகள் தங்கள் தொகுதி மக்களுக்கு முகம்கொடுப்பது கஷ்டம்தான். எனவே விலைவாசி உயர்வைக் குறைக்க உடனடியாக மந்திரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர்கள் கோருவது தவறாகாது.

அரசாங்கக்கட்சிக் கூட்டத்தில் வர்த்தக மந்திரி சில வர்த்தகர்கள் தமக்கெதிராகச் சதிசெய்வதாகக் கூறியிருக்கிறார். முன்னைய அரசாங்க மந்திரிகள் சிலரும், தற்போதைய மந்திரிகள் சிலரும் இந்தச் 'சதி' பற்றி அடிக்கடி கூறுவது வழக்கம். 'சதி'யைக் கண்டுபிடித்து சதிகாரர்களுக்குத் தண்டனை விதிப்பதும் மந்திரிமார்களினதும், அரசாங்கத்தினதும் கடமையாகும். 'சதி, சதி' என்று சொல்வதால் பொதுமக்கள் மீதுள்ள வாழ்க்கைச் செலவுப் பளு குறைந்துவிடாது.

வர்த்தகர்கள் 'சதி' செய்தால், அரசாங்கக் கட்சிக் கூட்டத்திலேயே ஒருவர் கூறியதுபோல், அத்தியாவசிய உணவுப் பொருள் வர்த்தக உரிமையைத் தனியார்துறையிலிருந்து எடுத்து ஒரு கூட்டு ஸ்தாபனத்திடம் ஒப்படைப்பதே மேல். 'மயிலே மயிலே இறகு போடு' என்றால் இறகு போடாது. அதைப் பிடுங்கித்தான் எடுக்கவேண்டும். வாழ்க்கைச் செலவு உயர்வைக் குறைக்க வர்த்தகர்களைக் கெஞ்சிக் கொண்டிருந்தால் போதாது. அவசியம் ஏற்பட்டால் உறுதியுடன், தயவு தாட்சண்யமின்றி நடவடிக்கை எடுத்துத்தான் ஆகவேண்டும்

## இலங்கை வானொலியில் புதிய நெருக்கடி

கொழும்பு, ஞாயிறு

இலங்கை வானொலிக்கு விளம்பரம் கொடுப்பதில்லையென இந்தியத் திரைப்பட உற்பத்தியாளர் சங்கமும், இந்திய சினிமா தயாரிப்பாளர் சபையும் கூட்டாகத் தீர்மானித்துள்ளது.

இதன்காரணமாக அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பில் தமிழ், ஹிந்தி, சினிமாப் பாடல்களை ஒலிபரப்ப முடியாமலிருக்கும்.

இத்தடை காரணமாக இலங்கை வானொலி சில லட்சக்கணக்கான ரூபாய்களை இழக்க நேரிடும்.

இந்திய—பாகிஸ்தான் தகராறின் போது இலங்கை வானொலி சபையினர் இந்திய தேசபக்திப் பாடல்களை ஒலிபரப்ப மறுத்ததின் காரணத்தினாலேயே மேற்கண்ட நிலைமை ஏற்பட்டுள்ளது.

## இருநேர வகுப்புகள்

கொழும்பு, ஞாயிறு

தென் மாகாணத்திலுள்ள ஆரம்ப பாடசாலைகளில் இடவசதி பிரச்னை தீர்க்கப்படாவிடில் இருநேர வகுப்புகள் நடாத்தப்படுமென்று நேற்று கல்வி அதிகாரி திரு. ஈ. எச். டி அல்விஸ் கூட்டிய மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

நல்லூரில்

## சிறுகைத்தொழில் நிலையம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கொழும்புத்திட்ட சிறுகைத்தொழில நிலையத்தை கைத்தொழில் மீன்பிடி கூட்டுறவு அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தனா திறந்துவைத்தார்.

பருத்தித்துறை வீதியிலுள்ள 223-ம் இலக்க கட்டடத்தில் இந்நிலையம் திறந்துவைக்கப்பட்டது.

திரு. ரி. எஸ் துரைராசா, கொக்குவில் கிராம சபை தலைவர் திரு. சி. அருளம்பலம். மாநகர சபை உறுப்பினர் திரு. அ. நடராசா, டாக்டர் கே. கனகரத்தினம் ஆகியோரை அமைச்சருக்கு அறிமுகம்செய்துவைத்தார். தொழிற்சாலை அதிபர் திரு. இராசையா மந்திரியை வரவேற்றார்.

## தடை

ஜாகர்த்தா, நவ 7

ஜாகர்த்தாவிலிருந்து வெளிநாடுகளுக்கு, வெளிநாட்டு ராஜதந்திரிகள் பிரயாணம் செய்வதை இந்தோனேஷியா தடைசெய்துள்ளது. "தற்போதைய நிலைமை" இதற்குக் காரணம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(பி. டி. ஐ.)

# நாட்டிலும் நகரிலும்

நீங்கள் பார்த்தது வால் வெள்ளி தானா அல்லது வேறேதாவது வானவூர்தியா? எவருமே நிச்சயமாக கூற முடியவில்லை.

நேற்றுக் காலையிலும் சுமார் ஐந்து மணியளவில் நான் அதைப் பார்த்த போது, சூரியன் உதிக்கும் திசையில், வானத்திலிருந்து சுமார் முப்பது பாகையில்ஒருவெண்ணிறக்கோடாகத் தெரிந்தது. ஆனால் வால் வெள்ளியின் முக்கிய பாகமான தலையைக் காணவில்லை!

ஒரு மாதத்துக்கு முன்பாக அதை அமெரிக்காவிலும்ஜப்பானிலும் கண்டார்கள். அதை முதலில் கண்ட ஜப்பானிய விஞ்ஞானியின் பெயரே அதற்கு இடப்பட்டிருக்கிறது. அச்சமயம்அது சூரியனை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாகக் கூறப்பட்டது. சூரியன் தான் அதன் தலையை விழுங்கிவிட்டதோ என்று நினைக்கும் படியாக அதன் வால் மட்டும் இப்பொழுது தெரிகிறது. அல்லது சூரியனின் ஒளிப் பிரவாகத்தில் தலை மறைந்து விட்டதோ? விஞ்ஞானிகளே இதுபற்றி எதுவும் நிச்சயமாகக் கூறமுடியாத போது சாதாரண 'வழிப் போக்கனுக்கு என்ன தெரியப் போகிறது?

வானத்தில் சுற்றித்திரியும் நாமறிந்த சந்திரன், சுக்கிரன், சனி முதலான கிரகங்களையும் அச்சுவினி முதலாம் நட்சத்திரக் கூட்டங்களையும் போல வால் நட்சத்திரம் ஒரு கட்டுப்பாட்டுக்கமையசுழன்று திரிவதில்லை' அதுஎங்கிருந்துவருகிறது; எப்பொழுது வருகிறது:எங்கேபோகின்றதென்று வானசாஸ்திரிகள் இன்னும் கண்டுபிடிக்கவில்லை. அதை ஒரு வானுலக 'சுந்தரலிங்கம்' என்று கூறலாம்.

1954-ம் வருடம் ஒருமுழு சூரிய கிரகணம் ஏற்பட்டபோது வான சாஸ்திரிகள் கூகாவென்று பூதக்கண்ணாடிகளையும் காமராக்களையும் சுமந்துகொண்டு அதை வடிவாய்ப் பார்ப்பதற்காக இலங்கைக்கு வந்துசேர்ந்தார்கள். அது வான சாஸ்திர விதிகளுக்குக் கட்டுப்பட்டு நிகழ்ந்த ஒரு சம்பவம் ஆனபடியால் அதன் நிகழ்ச்சியை முன்கூட்டியே அறிந்துகொண்டு அதை ஆராய்ச்சி செய்தார்கள். அந்த ஆராய்ச்சிகள் உபயோகமானவை. வால்வெள்ளியோ எப்பொழுது தோற்றப்படுமென்று ஒருவரும் கணக்கிடமுடியாத ஒரு வஸ்து. அதை ஆராய்ந்து பார்ப்பதிலும் பிரயோசனமில்லை. ஒரு விதிக்கு அமையும் நிகழ்ச்சியாயிருந்தால் தானே அதனால் வானுலகில் என்ன மாற்றங்கள் உண்டாகும், பூமியில் வாழும் நம்மை அது எவ்வாறு பாதிக்கும் என்று கண்டுபிடிக்க ஆவல் இருக்கும்?

வால்வெள்ளியின் தோற்றம் பலவருடங்களுக்கொரு தடவை நிகழ்வது. 1911-ம் ஆண்டில் ஹேய்லியின் வால் வெள்ளி தோற்றப்பட்டது. அது இனிமேல் 70 ஆண்டுகளுக்குப்பின், அதாவது 1981 இல் தான் தோற்றப்படுமென்று விஞ்ஞானிகள் கணக்கு வைத்திருந்தார்கள். இப்பொழுது தெரிவது ஹேய்லியின் வால்வெள்ளி அல்லாவிட்டால் அண்டப் பெருவெளியில் பல தூமகேதுகள் சுற்றித்திரிகின்றன என்று தெரிந்துகொள்ளலாம்.

வால்வெள்ளி தோற்றப்படுவது பொதுவாக பூமிக்கு நல்லசகுனமல்ல என்றுதான் மக்கள் நினைக்கிறார்கள். 1911-ல் ஹேய்லியின் வால் நட்சத்திரம் தோன்றிய போது இங்கிலாந்து மன்னர் எட்வர்டின் உயிரை உறிஞ்சியதாம். மூன்று வருடங்கள் கழித்து முதலாவது உலக யுத்தம் பிறந்ததாம். இந்த நிகழ்ச்சிகள் வால் வெள்ளி தோன்றியதால் ஏற்பட்டனவா அல்லதுகாகமிருக்கப் பனம்பழம் வீழ்ந்த மாதிரியா?

நாரதர் தோன்றினால் கலகம் பிறக்கும் என்று புராணக் கதைகள் சொல்லும். பதினான்கு உலகங்களுக்கும் தங்கு தடையின்றி 'விசா' கோளாறுகளின்றி நினைத்த நேரம் நினைத்த இடத்துக்குப் போகும் சக்தி நாரதருக்கு இருந்ததாம் அண்டங்களுக்கூடே சுயேச்சையாக சுழன்றுவரும் தூம

(6-ம் பக்கம் பார்க்க)

# ஐயாறன் எழுதுவது

கொழும்பு 'நகராதிபதி'யான மேயர் வின்சென்ட் பெரேரா பெரிய அதிர்ஷ்டசாலி. எளிய குடும்பத்தில் பிறந்தவர். கத்தோலிக்கர். வயதும் குறைந்தவர். படிப்பும் அதிகமில்லை. என்றாலும் கொழும்பு மாநகரசபை நூற்றாண்டு விழா கொண்டாடுகையில் அவர் இதன் மேயராக இருந்து இவ்விழாவுக்குத் தலைமைவகித்து வெற்றிகரமாக நடத்தியுள்ளார். இந்தப் பாக்கியம் அவருக்குக் கிடைக்கமுடிந்தது பெரிய காரியம்.

சாதாரணமாக இந்தப் பெருமை சுகததாசாவுக்குத்தான் கிடைத்திருக்கவேண்டும். ஆனால் அவர் தேசிய அரசாங்கத்தின் மந்திரியாகிவிட்டதால் அவர் மேயர் பதவியைவிட்டு விலக வேண்டி ஏற்பட்டது. அதனால் அச்சமயம் உபமேயராக இருந்த வின்சென்ட் பெரேரா மேயர் பதவிக்குத் தெரிவு செய்யப்பெற்றார்.

பல்லாண்டுகளாக நகர சபை மெம்பராக இருந்து, தமது தொகுதி மக்களின் அபிமானத்தையும் ஆதரவையும் தமது சேவை மூலம் பெற்றவர். யார் எந்தச் சமயம் என்ன முறையிட்டாலும் அவர் சற்றும் சிரமம் பாராமல் உடன் அதைச் சென்று கவனித்து, தம்மாலான முயற்சியைச் செய்வார். அவரது தொகுதியில் யாரைக்கேட்டாலும் அவர் மிக நல்லவர் என்றே கூறுவர். அப்படிப்பட்டவருக்கு இந்தப் பெரிய சிறப்புக்கிடைத்தது மிகப் பொருத்தமே யல்லவா?

ஜனநாயகத்தில் மிக ஏழையும் கூட, திறமையும் சேவை மனப்பான்மையுமிருப்பின் மேலான பதவிக்கு வரலாமென்பதற்கு வின்ஸென்ட் பெரேரா ஒரு நல்ல உதாரணமாவார். அவரைப் பாராட்டவேண்டும்.

ஃ ஃ ஃ

நூற்றாண்டு விழா விசேஷ கூட்டம் நகரமண்டபத்திற்கு வெளியே திறந்த வெளியில் நடைபெற ஏற்பாடு செய்திருந்தனர். வாசலில் மேடை போட்டிருந்த இடத்தின் மீது மட்டும்தான் மழைக்குப் பாதுகாப்பு இருந்தது. கொழும்பிலே இந்த மழை காலத்தில் திடீரென மழை வந்துவிடலாம். மழை வந்து எல்லாவற்றையும் குழப்பிவிடுமோ என்று அஞ்சினேன்.

வியாழனன்று காலையிலே நல்ல மழை. பின்னர் நல்ல வேளையாக மேகங்கள் கலைந்தன. ஐயாயிரம் ஆசனங்களுக்கு மேல் போட்டிருந்தனர். மாலையிலே பெண்கள் அழகு அழகாக உடுத்துக்கொண்டு தங்கள் துணைவர்களுடன் தம்பதிகளாக வந்ததுகண்குளிர்ந்தகாட்சி.

அடுத்த நூற்றாண்டு விழா நடக்கையில் நம்மில் எவ்வளவு பேர் அதைப் பார்க்க முடியும்? யாழ்ப்பாண மேயர் உள்ளிட்டு ஈழத்திலுள்ள பல மேயர்களும், பம்பாய், கராச்சி, மாஸ்கோ நகர மேயரகளும் விசேஷ அழைப்பின் மீது வந்திருந்தார்கள். பழைய மேயர்களான டாக்டர் என். எம். பெரேரா, சுகததாஸா முதலியவர்களும் மேடையிலே வீற்றிருந்தனர்.

எதிரே விகாரமகாதேவி பூங்கா, பச்சைப்பசேலென்று காட்சியளித்தது. 'பவுண்டென்கள்' விதவிதமாக நீரைப் பீச்சிக்கொண்டு கண்டோர் மனதைக் கவர்ந்தன. எங்கும் விதவிதமான வர்ண விளக்குகள். நீலநிறமான ஆகாயத்திலே பல வண்ணமேகக்

(6-ம் பக்கம் பார்க்க)

# சுபந்திரியோவை பதவி நீக்கம் செய்ய சுகர்ணோ மறுப்பு

## திடீர் புரட்சியில் ஈடுபட்ட குற்றச்சாட்டை நிராகரித்தார்?

### கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுகிறது

ஜாகர்த்தா, நவ. 7

இந்தோனேஷிய வெளிநாட்டு மந்திரி டாக்டர் சுபந்திரியோவை மந்திரிசபையிலிருந்து நீக்க வேண்டுமென்று பலர் விடுத்திருந்த கோரிக்கையை இந்தோனேஷிய அதிபர் சுகர்ணோ நிராகரித்துவிட்டார். "செப்டம்பர் 30" புரட்சியில் டாக்டர் சுபந்திரியோ சம்பந்தப்பட்டதாக அரசாங்கக் கட்சியைச் சேர்ந்தவர்களும் ஆதரவாளர்கள் பலரும் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அதிபர் சுகர்ணோவின் இந்த நடவடிக்கை, அரசாங்க வட்டாரங்களிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாக செய்திகள் கூறுகின்றன.

**"நடவடிக்கை எடுக்கப்படும்"**

இதற்கிடையே திடீர் புரட்சியில் ஈடுபட்ட இந்தோனேஷிய கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக அதிபர் சுகர்ணோ அறிவித்துள்ளார். ஆனால் எப்படியான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் கூறவில்லை.

கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக இந்தோனேஷிய ராணுவத்தினர் இப்பொழுது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இருந்தபொழுதிலும் மத்திய ஜாவாவில் கம்யூனிஸ்டுகளின் கை தொடர்ந்து ஓங்கிவருவதாகக் கூறப்படுகிறது.

தலைமறைவாகவிருக்கும் இந்தோனேஷியகம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் ஐடிட் கைது செய்யப்பட்டிருப்பதாகச் சில செய்திகள் கூறிய பொழுதிலும் இதுபற்றி உத்தியோகபூர்வமான அறிவிப்பு எதுவும் வெளியிடப்படவில்லை.

## 50 இந்தியர்கள் கொல்லப்பட்டனர்

ராவல்பிண்டி, நவ. 7

பாகிஸ்தான் வசமுள்ள (அஸாத்காஷ்மீர்) துருப்புகள் நேற்று 50 இந்தியர்களைக் கொலை செய்ததாக இங்கு அறிவிக்கப்பட்டது. காஷ்மீர் பகுதியின் பூஞ்ச் பகுதியிலுள்ள ஊரியில் ஹீய்ரட்டா என்னுமிடத்தில்இச் சம்பவம் நிகழ்ந்தது. (பி.டி.ஸி.)

## சீனாமீது வசைமாரி

அபிட்ஜான், நவ. 7

சீனாவின் விஸ்தரிப்பு ஆசையை ஐவரிகோஸ்ட் அதிபர் பீலிக்ஸ் ஹெளபௌவுட் கண்டித்தார்.

இங்கு ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில் சீனாவின் கொள்கைகள் நாசத்தையே ஏற்படுத்தும் என்று கூறினார். (பி.டி.ஸி.)

## "போராடுவோம்"

லுஸாக்கா, நவ. 7

வெள்ளையர் அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ள அவசரகால நிலைமையை நாம் வன்மையாக எதிர்க்க வேண்டுமென்று தடைசெய்யப்பட்ட ஆபிரிக்க மக்கள் யூனியனின் பொதுக்காரியதரிசி திரு. ஜோர்ஜ் நியான்டொரோ தெரிவித்துள்ளார்.

'எங்களுக்கு உதவியளிக்கும்படி நாங்கள் வெளிஉலகத்தைக் கோருகின்றோம்" என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (பி.டி.ஸி.)

## அவசரகால நிலைமை

ஸாலிஸ்பரி, நவ. 7

ரொடீஷியா முழுவதும் அவசரகால நிலைமைப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

ரொடீஷியாவின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படும் என்றஎச்சரிக்கையினாலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (பி. டி. ஐ.)

## அமெரிக்க விண் கப்பல்

கென்னடிமுனை, நவ. 7

அமெரிக்கா நேற்று விண்வெளிக்கப்பலொன்றை வானவெளிக்கு அனுப்பிவைத்தது.

பூமியின் இழுப்பு சக்தி பற்றி இக்கப்பல் ஆராயும்.

## நியூஸிலாந்தில் பாக். வர்த்தக தூதுகோஷ்டி

வெலிங்டன், நவ. 7

பாகிஸ்தான் வர்த்தகர்கள் தூதுகோஷ்டி ஒன்று இன்று இங்கு வந்துசேர்ந்தது. ஆறு பேர் கொண்ட இத் தூதுகோஷ்டி இங்கு ஒருவார காலம் தங்கியிருக்கும். (பி. டி. ஸி.)

## கி. பாகிஸ்தானில் இருட்டடிப்பு

டாக்கா, நவ. 7

கிழக்குப் பாகிஸ்தான் தலைநகரமான டாக்காவில் இருட்டடிப்புப் பயிற்சி நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (பி. டி. ஸி.)

## பாப்பரசர் அன்பளிப்பு

வத்திக்கான்நகர், நவ. 7

வட, தென் வியட்நாமில் பாதிக்கப்பட்ட யுத்த அகதிகளின்புனர்வாழ்வுக்காக பரிசுத்தபாப்பரசர் போல் 50,000டாலர்களை(18000 ஸ்டர்லிங்) அன்பளித்துள்ளார். (பி. டி ஸி.)

## பிரதமரின் வெளியூர் விஜயங்கள் ரத்து

பம்பலப்பிட்டி, ஞாயிறு

பிரதமமந்திரி திரு. டட்லி சேனநாயக்கா வைத்திய ஆலோசனையின்படி வெளியூர் விஜயங்களை எல்லாம் நவம்பர் 15ந் தேதிவரை பின்போட்டுள்ளார்.

பிரதமர் சுகவீனமுற்று இருந்தபோதிலும் வீட்டில் இருந்தபடியே உத்தியோகபூர்வமான விஜயங்களைக் கவனித்துவருகிறார்.

## கைகலப்பு

லீமா, நவ. 7

லீமாவிலிருந்து 875 மைல் தூரத்திலுள்ள ஸன்ருமன் என்னும் மாகாணத்தில் பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையேஏற்பட்ட கைகலப்புகளில் ஏழு பேர் காயமடைந்தனர். பி. டி. ஐ.

## சோவியத் பார்லிமெண்ட

மாஸ்கோ, நவ. 7

சோவியத் பார்லிமெண்ட் டிசம்பர் மாதம் 7-ம் திகதி மீண்டும் கூடும். (பி.டி.ஸி.)

## பாராட்டுவிழா

யாழ்ப்பாணம், திங்கள்

சமாதான நீதவானாக அண்மையில் நியமிக்கப்பட்ட திரு. சு. கனகசபையைப் பாராட்டி இன்று மாலை 4 மணிக்கு வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் ஒரு விழா நடைபெறும்.

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் வித்துவான் பொன். முத்துக்குமாரன், முதலியார் ஸி முத்துத்தம்பி, பிரம்மஸ்ரீ ஸி. எஸ். எஸ். மணிபாகவதர், சைவப்புலவர் தங்கம்மா அப்பாக்குட்டி, திருவாளர்கள் வீ. க. ஆறுமுகம், எஸ். இராசரத்தினம், த. சோமசுந்தரம், செல்வன் ச. செந்தில்ராசா ஆகியோர் பாராட்டுரை வழங்குவார்கள்.

# சீன வெளிவிவகார கொள்கை மாறலாம்

## அரைகுறை நண்பர்களை அது கத்தரித்து விடுமாம்

லண்டன், நவ. 7

கம்யூனிஸ்ட் சீனாவின் வெளிவிவகாரக் கொள்கை மாறலாம் என இங்கு வதந்திகள் உலாவுகின்றன.

வியட்நாமில் அமெரிக்க தாக்குதல்கள், இந்தோனேஷியாவுடன் பகைமை ஏற்பட்டிருப்பதையடுத்து சீனாவின் வெளிவிவகாரக்கொள்கையில் முக்கியமான மாறுதல்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன என்று கூறப்படுகிறது. இதுசம்பந்தமாக பீகிங்கில், சீன அரசாங்க உச்சநிலைக் கூட்டமொன்றும் நடைபெற்றிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

கொள்கை மாற்றத்தின் விளைவாக அமெரிக்கா மீதான சீனாவின் போக்கு இன்னும் கடுமையாகும் என்று சொல்லப்படுகிறது.

"அரைகுறை நண்பர்களை" சீனா நிராகரித்துவிடுமென்றும் முற்றிலும் பதிதாகத் தனித்து ஒதுங்கி நிற்கும் போக்கை சீனா வளர்த்துக் கொள்ளுமென்றும் கருதப்படுகிறது.

லண்டன் 'டைம்ஸ்' பத்திரிகையில் ஹாங்கொங்நிருபரிடமிருந்து வந்திருக்கும் ஒரு செய்தி இதைத் தெரிவிக்கிறது.

# பாகிஸ்தானில் இந்தியர்கள் நிலை

## பி. டி. ஐ. நிருபர் தரும் தகவல்

கல்கத்தா, நவ. 7

பாகிஸ்தானிலிருந்து வெளியேற்றப்பட்டு நேற்று கல்கத்தா வந்துசேர்ந்த பி. டி. ஐ. நிருபர் ராய் பாகிஸ்தானில் சிறுபான்மையினத்தவர்கள் நடத்தப்படும் விதம் குறித்து விபரங்கள் வெளியிட்டுள்ளார்.

மூவாயிரம் இந்தியப் பிரஜைகள் அங்கு கைதிகளாகக் காவலில் வைக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

திரு. ராயும், அவரது மனைவியும் பாகிஸ்தானில் 52 தினங்கள் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தனர்,

திரு. ராய், நேற்று கல்கத்தா வந்து சேர்ந்ததும் அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது:

"பாகிஸ்தானில் இந்தியப் பிரஜைகள் மிகவும் மோசமாக நடத்தப்படுகின்றனர். சந்தேகிக்கப்படும் இந்தியப் பிரஜைகள் குற்றவாளிகள் மாதிரி கைவிலங்கிட்டு, முகாமொன்றுக்குப் பகிரங்கமாக அழைத்துச் செல்லப்படுகின்றனர். சிலவேளைகளில் பலர் கைகள் கட்டப்பட்டு அழைத்துச் செல்லப்படுகின்றனர். இவர்களுக்கு முகாமில் போதிய உணவு கிடைப்பதில்லை. நேரத்துக்குச்சாப்பாடில்லை. கிழக்குப் பாகிஸ்தானில் சிறுபான்மை இனத்தவர்கள், வீடுகளை விட்டுத் துரத்தப்படுகின்றனர். இளம் பெண்கள் பலர் பலாத்காரம்செய்யப்பட்டனர். அங்கு இந்தியப் பிரஜைகள் கேவலமான முறையில் நடத்தப்படுகின்றனர்."

யுத்த நிறுத்தத்துக்குப் பின்னர்

# இந்திய பகுதி எதையும் பாக். பிடிக்கவில்லை

## சாஸ்திரியின் கூற்றுக்கு பாகிஸ்தான் மறுப்பு

ராவல்பிண்டி, நவ. 7

**இந்திய-பாகிஸ்தான் யுத்தநிறுத்தத்துக்குப் பின்னர் இந்தியாவின் எந்த நிலையையுமோ அல்லது பகுதியையோ பாகிஸ்தான் பிடிக்கவில்லை என்றும் பாகிஸ்தான் துருப்புகள் ஒரு அடி தூரம்கூட முன்னுக்கு நகரவில்லையென்றும் பாகிஸ்தான் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.**

இதுசம்பந்தமாக பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சு அதிகாரியொருவர் தெரிவிக்கையில், யுத்த நிறுத்தத்துக்குப் பின்னர் பாகிஸ்தான் துருப்புகள்சில இடங்களைப் பிடித்திருப்பதாக இந்தியப் பிரதமர் சாஸ்திரி சுமத்திய குற்றச்சாட்டு அர்த்தமற்றது என்றும் தங்களது குற்றங்களை மறைக்கவே இப்படியான பொய்களை பிரதமர் சாஸ்திரி அவிட்டுவிடுகிறார் என்றும் கூறினார்.

"இந்திய-பாகிஸ்தான்யுத்தத்தின்போது பாகிஸ்தான் துருப்புகள் இந்தியாவின் அதிகமான பகுதிகளைப் பிடித்தது. ஆனால் இதனை மறைத்து இப்பொழுது இந்தப்பகுதிகளைப் பிடிக்க இந்தியா புதிய தந்திரமொன்றைக் கையாண்டு வருகிறது. போர்நிறுத்தத்தை பாகிஸ்தான் துருப்புகள் மீறிவருவதாக இந்தியா அறிவிக்கிறது. உண்மையில் இந்தியா தான் போர்நிறுத்தத்தை மீறி பாகிஸ்தான் துருப்புகள் வசமுள்ள தனது பகுதிகளை மீட்கப் பார்க்கிறது" என்றும் அந்த அதிகாரிதெரிவித்துள்ளார். (பி.டி.ஐ.)

## மதுரைத் தெருக்களில் 'புட்டோக்கள்'

மதுரை, நவ. 7

மதுரைநகரில் 'புட்டோக்கள்' பலர் திடீரென்று ஆங்காங்கே உலவினர்.

மதுரைத் தெருக்களில் திரிந்த சொறி நாய்கள் உட்பட எல்லா நாய்களின் மீதும் 'புட்டோ' (திமிர் பிடித்தபாகிஸ்தான் அமைச்சர்) என்று வர்ணத்தினால் எழுதிவிடப்பட்டு அவை நகரில் உலாவித் திரிந்தன. இந்த 'புட்டோ'க்களைக் கண்ட மக்கள் கேலிசெய்து கைகொட்டிச் சிரித்தனர். இந்த நாய்களை 'புட்டோ' 'புட்டோ' என்று கூப்பிட்டும் ரசித்தனர். மற்றும் சிலர் காறி உமிழ்ந்தும் புட்டோவின் மீதுள்ள வெறுப்பைக் காட்டினர்.

ஐ. நா. பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் இந்தியப் பிரதிநிதிகளை 'நாய்கள்' என்று பாகிஸ்தான் அமைச்சர் புட்டோ குறிப்பிட்டதைக் கண்டிக்கும் முறையில் இந்தக் கருத்து மிக்க வேடிக்கை நிகழ்ச்சியில் மேலமாசி வீதியைச் சேர்ந்த இளைஞர்கள் ஈடுபட்டனர்.

# "பதவிக்காக உழைக்கவில்லை": இணுவில் வரவேற்பில் செனட்டர்

கோண்டாவில், ஞாயிறு

"அன்று முதல் இன்று வரை தமிழ் மக்கள் தன்மானத்துடன் வாழவேண்டும், தமிழ்த்தாய் தனது துயரிலிருந்து விடுதலை பெறவேண்டும், தமிழன் பிரதேசம் தமிழனுக்கென்றிருக்கவேண்டும் என்று பரந்த மனப்பான்மையோடுதான் உழைத்து வந்தேனே தவிர, நான் உழைப்பதால் எனக்கோர் உயர்ந்த ஸ்தானத்தைப் பெற்றுத்தருவார்கள் என்றோ அல்லது பதவி ஆசையினால் அடிமைப்பட்டோ உழைக்கவில்லை, நான் எவ்வளவுதான் செய்தாலும் மக்கள் அதை ஆதரிக்காமல் விட்டால் நான் ஒரு சிறந்த ஊழியனாகக் கருதுவதற்கிடமில்லை. நான் பெற்ற பதவி தமிழ் மக்களாகிய நீங்கள் பெற்றுத்தந்த பதவியேயன்றி நான் எனது கெட்டித்தனத்தினால் பெற்றதல்ல."

இணுவில் மத்திய சந்தை மைதானத்தில் இணுவில் பொதுமக்களால் அளித்த வரவேற்பில் செனட்டர் திரு. எஸ். நடராசா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"இன்றைய அரசியல் சூழ்நிலையில் சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் அரசியலிலும் நாட்டின் சுதந்திரத்திலும் பங்குண்டு. அவர்களும், நாமும் சமத்துவமாக வாழவேண்டும் என்று உணருகின்ற வேளையில் நாம் பிளவுபடாது ஒற்றுமையுடன் வாழவேண்டும். பாராளுமன்றப் பிரதிநிதிகளுக்கு தமது தொகுதியின் மக்களின் குறை நிறைகளைமாத்திரம் கவனிக்கும் பொறுப்புண்டு. ஆனால் எனக்கோ தமிழ் மக்கள் எல்லோருக்கும் உழைக்கவேண்டும் என்ற பொறுப்புண்டு.

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பேசுகையில், நாம் எதற்காக திரு. நடராசாவைமூதவைக்குத் தெரிவு செய்தோம் என்று உற்று நோக்குவோமாயின் திரு. நடராசா நீண்ட காலமாக தமிழினத்திற்கு உழைத்து வந்ததற்கு பிரதியுபகாரமாக நாம் தெரிவு செய்யவில்லை, அவரது தன்னலமற்ற சேவையையும், கட்சியின் கொள்கையில் ஊறிஇருக்கும் பண்பையும்நோக்கியே நாம் செனட்டர் பதவிக்கு நியமித்தோம். நடராசா 1944ம் ஆண்டு தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் இருந்து உழைத்தார். 1948-ம் ஆண்டு தமிழ்க்காங்கிரஸ் கட்சியிலிருந்தும் விலகியஅன்றுமுதல் இன்றுவரை தமிழ்மக்களின் சுபீட்சத்துக்கு உழைத்து வருகின்றார். அவரின் தன்னலமற்ற சேவையால் தமிழினம் ஓரளவு சுபிட்சமடையும் என்பது நம்பிக்கை என்று கூறினர்.

உடுவில் பாராளுமன்றப் பிரதிநிதி திரு. வி. தர்மலிங்கம் பேசுகையில் 'முன்பு ஆளுங்கட்சியோடு எதிர்த்தால்தான் நாம் வேண்டியதைப் பெறலாம் என்று நினைத்தோம். இன்றைய அரசியல் சூழ்நிலையில், அந்நிலை மாறி ஒத்துழைப்பால் நாம் பெறவேண்டியவற்றைப்பெற்றுவிடலாம் என்ற நோக்கத்திற்கு வந்துள்ளோம். அந்நோக்கம்வெற்றி பெறும் என்ற நம்பிக்கையுடன் இருக்கின்றோம் என்றார். கூட்டத்திற்கு உடுவில் கிராமசபைத் தலைவர் திரு. ச. முத்துலிங்கம் தலைமைத் வகித்தார்.




உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொண்டீர்களா?

நத்தார் - புத்தாண்டை முன்னிட்டு நடைபெற்றுக்கொண்டிருக்கும் எமது

மலிவு விற்பனை

மூலம் பூர்த்தி செய்துகொள்ளுங்கள்!

| | | |
|---|---|---|
| கண்ணாடி அலுமாரி | 275-00 | 225-00 |
| டபிள் ஆம்செயர் செற்றி | 265-00 | 235-00 |
| டபிள் ஆம் செயர் (பிளாஸ்ரிக்) | 40-00 | 35-00 |
| 9" கதிரை (பிளாஸ்ரிக்) | 15-00 | 13-50 |
| 6" கதிரை (பிளாஸ்ரிக்) | 11-00 | 8-75 |

மற்றும்

உங்களுக்குத் தேவையான எல்லா தளபாடங்களும் வெகுவாக விலை குறைக்கப்பட்டிருக்கிறது.

பாஷன் பேணிஷிங் பலெஸ்

(தளபாட மாளிகை)

5-7, ஸ்ரான்லி வீதி, — யாழ்ப்பாணம்.


ஆசிரியருக்குக் கடிதம்

## சுவீகரிக்கப்பட்ட பாடசாலை ஆசிரியர்கள்

சுவீகரிக்கப்பட்ட பாடசாலை ஆசிரியர்கள் இதுவரை நிரந்தரமாக்கப்படவில்லை. அவர்கள் 1930-ம் ஆண்டிற்கு முன் முகாமையாளர் இடத்தில் நியமனம் பெற்றிருந்தாலும் இன்று அரசாங்கத்தில் புதிதாக நியமனம் பெற்றவர்களாகவே கணிக்கப்படுகின்றனர். பதவி உயர்ச்சி கொடுப்பதில் அரசாங்க பாடசாலை ஆசிரியர்க்கும் சுவீகரிக்கப்பட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கும் அரசாங்கமே பேதம் காட்டுகிறது. லேடி லொக்கோர் நிதியில் கடன் பெறுதல் - சம்பளமும் பிரயாணச்செலவு இவைகளிலும் அரசாங்கம் பேதம் காட்டுகிறது. அன்றியும் 1960-ம் ஆண்டிற்கு பிறகு சுவீகரிக்கப்பட்ட பாடசாலைகளிலிருந்து இன்று வரை எவரும் முதல் தர தலைமையாசிரியராகப் பதவி உயர்வு பெறவில்லை. சுவீகரிக்கப்பட்ட பாடசாலைகளில் முதல்தர தலைமை ஆசிரியர்க்கு இடங்கள் வரும்போது அவ்விடங்களில் முன் முஸ்லிம் பாடசாலைகளில் தலைமையாசிரியர்களாயிருந்து அரசாங்கத்தின் கெடுபிடிகளினால் பதவி இழந்து சம்பளம் மாத்திரம் பெற்றுக்கொண்டிருந்த தமிழாசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்க்ள்.

இந்த நிலைமையில் சுவீகரிக்கப்பட்ட பாடசாலை ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

இந்த நிலைமையில் சுவீகரிக்கப்பட்ட பாடசாலை ஆசிரியர்களை 1966ம்ஆண்டு ஆரம்பத்தில் மாற்றித்தீருவோமென கல்வி அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் அரசினர் பாடசாலை ஆசிரியர்களும் கங்கணம் கட்டுகின்றனர். சரி பிழையை ஆலோசியாமல் தாயில்லாப் பிள்ளைகளின் நிலைமையில் எம்மையெல்லாம் மாற்றுவதாயின் அதையெல்லாம் ஆட்சபேிப்பதற்கு நாம் தாயராயில்லை.

நியாயமான முறையில் எம்மை இடமாற்றஞ்செய்ய வேண்டுமாயின் (1) எமக்கெல்லாம் வேலையேற்ற முதல் நியமனத் தேதியிலிருந்தே நிரந்தர நியமனம் கொடுக்கப்படவேண்டும்; (2) பதவி உயர்ச்சி-முதுமுறை அட்டவணை முதலிய எந்த விஷயத்திலும் எமக்கும் அரசினர் ஆசிரியர்க்கும் எவ்வித பேதமும் காட்டப்படக்கூடாது; (3) சுவீகரிக்கப்பட்ட பாடசாலைகளில் இதுவரை காலமும் பதில் தலைமைஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்க்கெல்லாம் அத்திகதியிலிருந்தே நிரந்தர நியமனம் கொடுக்கப்படவேண்டும்.

முதலில் எங்களுக்குள்ளே உள்ள வித்தியாசங்களை அகற்றிக்கொண்டு ஒரே சங்கமாகச் சோந்து சேவை செய்ய ஆசிரிய சகோதரர்கள் முன்வரவேண்டும்.

மு. சுப்பிரமணியம்,
தலைமையாசிரியன்.
சரஸ்வதி த. க. பாடசாலை,
சரசாலை.

# கடந்தகால நிகழ்ச்சிகளை மறந்துவிட்ட மந்திரிகள்

## யூ. என். பி. குழு கூட்டத்தில் பின் ஆசன எம். பி. க்கள் புகார்

பம்பலப்பிட்டி, ஞாயிறு

சில மந்திரிகளின் நடவடிக்கைகளைப் பார்த்தால் அவர்கள் 1959-ம் ஆண்டு நிகழ்ந்த பாடத்தைப்படிக்கவில்லையென தெரிகிறது. அவர்கள் பின்பற்றிவரும் அரசியலிலிருந்தும் 56-ம் ஆண்டிற்கு முன்பிருந்த காலத்தை நோக்கிச் செல்கின்றார்கள் எனத் தெளிவாகத் தெரிகிறது.

அலரிமாளிகையில் நேற்றுக்காலை நடைபெற்ற ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்றக் குழுவின் விசேஷக் கூட்டத்தில் மேற்கண்டவாறு பல பின் ஆசன எம். பி.க்கள் குற்றஞ் சுமத்தினர்.

வாழ்க்கைச்செலவுஉயர்வு பற்றி ஆராய்வதற்குக் கூட்டப்பட்ட இக்கூட்டத்தில், சுகவீனம் காரணமாகப் பிரதமர் டட்லி சேனநாயக்கா கலந்து கொள்ளவில்லை. ராஜாங்கமந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

தற்பொழுது இலங்கையிலிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த மந்திரிகள் கலந்துகொண்டனர். காணி நீர்ப்பாசன மந்திரி திரு. சி. பி. டி' சில்வா, கூட்டம் ஆரம்பமாவதற்கு முன் சென்றுவிட்டார், கடந்த தேர்தலில் தோல்வியுற்ற யு. என். பி. அபேட்சகர்களும் கலந்துகொண்டனர்.

வாழ்க்கைச் செலவு பிரச்னையைத்தீர்க்கமுடியாவிடில் வர்த்தகமந்திரி செனட்டர் டாக்டர் எம். வி. பி. பீரிஸ் பதவியிலிருந்து விலகவேண்டுமென்று ஒரு அங்கத்தவர் கோரினார்.

மக்களுக்கு உணவு வகைகள் நியாயமான விலையில் கிடைப்பதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுவருவதாகவும், வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கு தினமும் ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெறுவதாகவும் மந்திரி பீரிஸ் கூறினார்.

## உருளைக்கிழங்கு உற்பத்தி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் காரியாதிகாரிப் பிரிவுக்குளடங்கிய கொக்குவில், கோண்டாவில் திருநெல்வேலி ஆகிய கிராமங்களில் 1965-66 காலப் போகச் செய்கையில் உருளைக்கிழங்கு உற்பத்திசெய்கைக்கு மேட்டுநில கமக்காரர்கள் முன்வந்திருக்கிறார்கள். அரசாங்கம் சென்ற மூன்றாண்டுகளாக பரிசோதனை நடத்தியதன் காரணமாக இத்திட்டம் யாழ்ப்பாணத்திற்கு நல்லபயனைக் கொடுக்கும் என்ற திடநம்பிக்கையை விவசாயஇலாகா மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இப்பகுதி விவசாயப் போதனாசிரியர் திரு. இ. சி. செல்வராசனினதும் அவரின் உதவியாளர்கள் திரு. ஏ. கந்தையா, திரு. கே. ஆறுமுகம் ஆகியோரின் முயற்சியினாலும் 95 கமக்காரர்கள் உருளைக்கிழங்குச் செய்கைக்கு முன்வந்திருக்கிறார்கள். தற்பொழுது 365 அந்தர் உருளைக்கிழங்கிற்கு முற்பணமாக பணம் கச்சேரியில் கட்டப்பட்டுள்ளது. கோண்டாவில் பலநோக்கச் சங்கம் உருளைக் கிழங்கு செய்யப் போகும் காமக்காரர்களுக்கு உதவி அளிக்கமுன்வந்துள்ளது.

## 9 பேர் பலி

திரிபொலி, (லிபியா) நவ. 7

இங்கிருந்து 300 மைல் தூரத்திலுள்ள எண்ணெய் வயல்களில் ஏற்பட்ட தீ விபத்தில் 9 பேர் கொல்லப்பட்டனர். பி: டி. ஸி.


பூட்டுகள், ஆமைப் பூட்டுகளின் இறக்குமதியாளர்கள்

YALE

'யேல்'

பூட்டுகள் நீங்கள் கொடுக்கும் பணத்துக்கு பெறுமதியானதாக இருக்கும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

விசாரணைகளுக்கு:

ராஜேந்திரம்ஸ் லிமிட்டெட்,

விற்பனைப் பகுதி
மகாராஜா பில்டிங்,
பாங்ஷால் வீதி, கொழும்பு-11
தொலைபேசி எண்: 3603
3634



பெட்டா பார்மஸி

உங்களுக்கு வேண்டிய

மருந்துகள், ரசாயனப் பொருள்கள், மருந்து தயாரிப்பதற்கான பொருள்கள் ரண சிகிச்சைக் கருவிகள் காயங்களைக் கட்டுவதற்கான துணிகள் யாவற்றுக்கும் எம்மிடம் வரவும்

வி. பி. பி. ஓடர்கள் ஏற்கப்படும்

23, டாம் வீதி கொழும்பு 12 போன் 7213

# விளம்பரம்

## பருத்தித்துறை நகரசபை

### கேள்விப்பத்திர அறிவித்தல் 1966.

பருத்தித்துறை நகரசபையின் கீழ்க்குறிப்பிடப்படும் 1966-ம் ஆண்டு குத்தகைகளுக்கு 1965-ம்ஆண்டு நவம்பர் மாதம் 15-ம் தேதி நண்பகல் 12-00 மணிவரையும் பருத்தித்துறை நகரசபைத் தலைவரால் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப்பத்திரங்கள் 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 12-ம் தேதி 2-00 மணிவரை இக்கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம். பிணைப்பணமும், கேள்விப்பத்திரங்களின் நிர்ணய விலைகளும் கீழ் குறிப்பிட்டபடி செலுத்திப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

| | பிணைப்பணம் | கேள்விப்பத்திர நிர்ணயவிலை |
|---|---|---|
| | ரூபா—சதம். | ரூபா--சதம் |
| காய்கறிச் சந்தை... | 250 — 00 | 25 — 00 |
| மீன் சந்தை... ... | 150 — 00 | 15 — 00 |
| மாட்டிறைச்சிக்கடை... | 25 — 00 | 5 — 00 |
| வான், மாட்டுவண்டில் காலை... ... ... | 50 — 00 | 5 — 00 |
| தெரு, சந்தைமுதலியவற்றில் உள்ளகுப்பை... | 25 — 00 | 5 — 00 |
| நகரசபைக்குரியகாணிகளில்பிரயோசனங்கள் . | 25 — 00 | 5 — 00 |

கேள்விப் பத்திரத்திற்காகச் செலுத்திய பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. மற்றும் குத்தகையை ஏற்றுக்கொள்ள மறுப்பவரினது பிணைப்பணமும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

3. குத்தகை ஏற்பவருக்கு அதைக் கொடுக்கவோ, அன்றி நிராகரிக்கவோ நகரசபைத்தலைவருக்குப் பூரண உரிமையுண்டு. இவைகளைப்பற்றிய முழு விபரங்களைத் தெரிய விரும்பின் காரியாலய நேரங்களில் நகரசபைக் காரியாலயத்தில் தெரிந்து கொள்ளலாம்.

நகரசபைக்காரியாலயம்,
பருத்தித்துறை,
ஐப்பசி-28-1965.

தலைவர்,
ந. நடராசா,
நகரசபை, பருத்தித்துறை.

## பிரிவிடுதல் நொத்தீஸ்

சாவகச்சேரி
டிஸ்திறிக் கோட்டில்
குஞ்சுப்பரந்தன் வல்லிபுரம் கிருஷ்ணபிள்ளை
வழக்காளி
இலக்கம் 2807/பி
எதிராக

1. குஞ்சுப் பரந்தன் தம்பு பாலசுந்தரம்
2. குஞ்சுப்பரந்தன் வல்லிபுரம் கைம்பெண் சிவக்கொழுந்து தனக்காகவும் பராயமற்ற 4-ம் 5-ம் 6-ம் எதிரிகளின் பராபரிப்புக்காரியாகவும்
3. குஞ்சுப்பரந்தன் சுந்தரம்பிள்ளை தில்லையம்பலம்

பராயமற்றவர்
,, 4. குஞ்சுப்பரந்தன்வல்லிபுரம் சிவராசா
,, 5. ,, வல்லிபுரம்செல்வராசா
,, 6. ,, வல்லிபுரம் சுந்தரராசா

7. கல்வயல், சாவகச்சேரி செல்லத்துரை சுந்தரம்
8. குஞ்சுப்பரந்தன் இராமலிங்கம், வயித்திலிங்கம்
9. மனைவி பராசக்தியும்
10. குஞ்சுப்பரந்தன் செல்லத்துரை துரைராசா
11. சாவகச்சேரி வடக்கு பசுபதி முத்தையாவும்
12. மனைவி கமலமும்
13. 'விக்நேஸ்வர வாசா' மீசாலை தெற்கு, மீசாலை, வேலு கந்தையா கைம்பெண் வள்ளியம்மை
14. கச்சாய் ரோட்டு, சாவகச்சேரி, பிள்ளையினர் பொன்னையா கைம்பெண் சின்னப்பிள்ளை
15. கச்சாய்ரோட்டு, சாவகச்சேரி பொன்னையா திருநாவுக்கரசு

எதிராளிகள்

குஞ்சுப்பரந்தனிறைநெற்பர. 260 கொண்டதும் கிழக்கு வாய்க்காலும், வடக்கு செ. சுந்தரத்துக்கும் பங்காளருக்கும், மேற்கு சு. வல்லிபுரத்தின் உரிமைக்காரருக்கும் பங்காளருக்கும் தெற்கு முடிக்குரியவாதனம் எனத் திக்குகள் பூண்டதுமான 'பெரியகமம்' அல்லது ''சடைவக்கியடி'' அல்லது ''கிளவித்தறை'' என்னும் ஆதனத்தை 1951-ம் ஆண்டின் 16.ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச்சட்டத்திற்கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தில் ஓர் பிரிவிடுதல் வழக்குத் தொடர்ந்திருக்கின்றதென்று இத்தாலுமக்கறிவிக்கப்பட்டிருக்கின்றது. இக்காணியில் உரிமைஉள்ளவர்கள் 1965ம் ஆண்டு கார்த்திகை மாதம் 12-ந் திகதி கோட்டில் உரிமையைக் கூறலாம்.

கோட்டாரின் கட்டளைப்படி

எஸ். கே. திரவியநாயகம்
வழக்காளியின்
நியாயதுரந்தரர்

சாவகச்சேரி
5-11-65. 1239

ஓம்

## திவ்ய ஜீவன மகளிர் இல்லம்

கண்டி திவ்ய ஜீவன சங்கத்தின் ஆதரவில் குண்டசாலையையடுத்த கல்மடுவப் பகுதியில் திவ்யஜீவன மகளிர் இல்லம் ஒன்று, ஸ்ரீ சுவாமி விமலானந்த மாதாஜி தலைமையில் நடைபெற்று வருகின்றது. இதில் சமய சமூகப் பணிகளில் ஆர்வமுள்ளவர்களும், தமது பராமரிப்புக்கு எவரும் இல்லாதவர்களும், சமய சூழ்நிலையிலுள்ள விடுதியிலிருந்து கொண்டு வெளியே சென்று வேலை பார்ப்பவர்களும் மாணவிகளும் சேர்ந்து பயன் பெற இடமுண்டு. இவ்வில்லத்தில் சேர்ந்து பணி புரியவும், பயனடையவும் விரும்புவோர் வயது, படிப்பு, உடல் நலம், தொழில், தற்போதைய வாழ்க்கைநிலை, சேர்வது நிரந்தரமாகவா, அல்லது தற்காலிகமாகவா அல்லது விடுதியாளராகவா என்ற முழு விபரங்களையும் தந்து மனுச் செய்துகொள்ளலாம். இல்லத்திற் சகல சமயங்களுக்கும் பொதுவான வழிபாடு, பணிகள் ஆகியன இருக்குமாகையால் எந்தச் சமயத்தவராயினும் சேர்ந்துகொள்ளலாம்.

முகவரி:-
திவ்யஜீவன மகளிர் இல்லம்,
சச்சிதானந்த தபோவனம்,
தென்னக்கும்பர,
கண்டி.
1242



உதைபந்தாட்டம்

## இரு பிரிவுகளிலும் சென். பற்றிக்ஸ் வெற்றி!

யாழ்ப்பாணம், திங்கள்

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கும், யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற 1-ம் 2-ம் பிரிவுகளுக்கிடையேயான உதைபந்தாட்டப் போட்டிகளின் இரு பிரிவுகளிலும் சென். பற்றிக்ஸ் வீரர்கள் வெற்றியீட்டினர். மிகவும் விறுவிறுப்பாகக்காணப்பட்டமுதலில் நடைபெற்ற 2.ம் பிரிவுப்போட்டியில் இடைவேளைவரைக்கும் ஒரு கோஷ்டியுமே கோல்போடவில்லை. போட்டியின்போது இருபக்க கோல்காப்பாளருக்கும் பந்து சரியான வேலையைக் கொடுத்துக் கொண்டிருந்தது. இரண்டு கோஷ்டியும் ஒன்றை ஒன்று விட்டுக்கொடுக்காமல் விளையாடின. இடைவேளையின் பின்னர் அதுவும் கடைசி நேரத்தில் சென். பற்றிக்ஸ் முன்னணி வீரர் டொமின் இராசையா மிகவும் சிரமப்பட்டு யாரும் எதிர்பார்க்காதவகையில் ஒரு கோலை ஹாட்லிக் கோலுக்குள் போட்டார். பொதுவில் இரு கோஷ்டி வீரர்களுமே திறமையாக விளையாடி சிறந்த போட்டியை பார்வையாளருக்கு அளித்தனர். இப் போட்டி முடிவில் சென். பற்றிக்ஸ் கோட்டி 1—0 கோலால் ஹாட்லிக்கோஷ்டியைத் தோற்கடித்தது.

முதல் பிரிவுப்போட்டியில் சென் பற்றிக்ஸ் காப்டன் முன்னணி வீரர் சந்தியாக்கோவின் விளையாட்டு கவர்ச்சியாகவிருந்தது. அடுத்தடுத்து 2 கோல்களை உதைத்துத்தள்ளினர். இடைவேளையின்போது ஹாட்லி ஒரு கோலும் போடாமல் சென். பற்றிக்ஸ் 2 கோல்கள் பெற்றிருந்தது. இடைவேளையின் பின்னரும் சந்தியாக்கோ ஒரு கோல் போட்டார் மற்றும் வெற்றிவேலு ஜோசப் ஆகியோர்கூட்டோடுகூடாக ஆளுக்கொவ்வொரு கோல் போட்டனர் ஹாட்லிக்கல்லூரியின் இடது முன்னணி வீரர் பாராட்டத்தக்க முறையில் மின்னல் வேகத்தில் ஒரு கோலைப்போட்டார். இவரது துரிதமுயற்சி இல்லாவிட்டால் ஹாட்லி ஒரு கோலும் எடுக்காமலே தோற்றிருக்கும். சென். பற்றிக்ஸ் வீரரான கிறிஸ்ரியன் பலவிதத்திலும் திறமையாக விளையாடினர். ஹாட்லியின் கோல்காப்பாளர் கொஞ்சம் கவனமாக நின்றிருந்தால் ஒருசில கோல்களைக் காப்பாற்றியிருக்கலாம். இப் போட்டி முடிவில் சென்.பற்றிக்ஸ் ஹாட்லிக் கல்லூரியை 5—1 கோல்களால் வெற்றியீட்டியது.

மேற்படி போட்டிகள் ஹாட்லி விளையாட்டரங்கில் நடைபெற்றன.

## மத்தியஸ்தர் முடிவு

### கல்லூரி அதிபர் ஆட்சேபம்

யாழ்ப்பாணம், திங்கள்

சென்ற செவ்வாய்க்கிழமை(2-11-65) யாழ்ப்பாணம் விளையாட்டரங்கில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரிக்கும், யாழ். மத்திய கல்லூரிக்குமிடையில் (முதல் பிரிவு) நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் மத்தியஸ்தர் அளித்த தீர்ப்பை ஆட்சேபித்து சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரி அதிபர் யாழ்ப்பாணப் பாடசாலை விளையாட்டுக் கழகத் தலைவருக்கு ஒரு ஆட்சேபக்கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இதுசம்பந்தமாக உதைபந்தாட்டக் குழுவினர் பரிசிலனை செய்யவிருப்பதாகவும் அறியப்படுகிறது.

## கட்டுப்பாட்டு திட்டம்

பம்பலப்பிட்டி, ஞாயிறு

ஐந்து பிரபல வர்த்தக சபைகள் தங்கள் அங்கத்தவர்கள் மீது கட்டுப்பாடு விதிக்கும் ஒரு திட்டத்தைக் கொண்டுவரத் தீர்மானித்துள்ளனர்.

வர்த்தக ஆலோசனைக்கமிட்டி ஒன்றையும் இச்சபைகள் நியமித்துள்ளன.

தேவை

## ஸ்ரீ முருகன் ப. நோ. கூ. சங்கம்

பெரிய ஒலுக்குளம்

மேற்படி சங்க பண்டகசாலைக்கு மனேச்சர் தேவை. 20-11-65க்கு முன் கௌரவ காரியதரிசிக்குபதிவுத்தபால் மூலம் (தபால் உறையில் இடதுபக்க மேல் மூலையில்) பண்டகசாலை மனேச்சர் விண்ணப்பம் எனக் குறிப்பிடவேண்டும்)

1. தராதரம்: எஸ். எஸ். ஸி. வகுப்பு சித்தி பெற்றவராகவும் கூ. ப. த. பத்திரம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும். விண்ணப்பத்துடன் 3 நற்சான்றுரைப் பத்திரம் அனுப்பவேண்டும். சில்லறைக் கடை அனுபவமுள்ளவருக்கு விசேஷ சலுகை காட்டப்படும்.
2. வயது: 25 வயதிற்கு மேற்பட்டவராகவும் 35 வயதிற்கு உள்பட்டவராயும் இருத்தல் வேண்டும்.
3. வேதனம்: மாதாந்த வேதனம் விற்பனையாளர் உட்பட 150/- நூற்றிஐம்பது மட்டும்.
4. பிணை: ரொக்கம் ரூபா ஆயிரம் (ரூ. 1000/-) உறுதி ரூபா இரண்டாயிரம் (ரூ. 2000/-)

குறிப்பு: தெரிவு செய்யும் விண்ணப்பத்தார் சங்கம் குறிப்பிடும் திகதிக்கு சகல பிணைகளையும் கட்ட ஆயத்தமாய் இருத்தல் வேண்டும்.

இப்படிக்கு
செ. சிதம்பரப்பிள்ளை,
கௌரவ காரியதரிசி.

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

''வேகா'' பம்பிங் 5 வால்ஸ் ரேடியோ ஜேமன் தயாரிப்பு ஒன்று விற்பனைக்கு நல்ல நிலைமையில் உள்ளது. க. வேலுப்பிள்ளை, 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 1349

### தேவை

காரியாலய நிர்வாகத்தில் 10 வருட அனுபவமுள்ள 35வயதிற்குமேற்பட்ட ஒருவர் தலைமைக் குமாஸ்தாவாக (Chief Clerk) கடமையாற்றுவதற்கு தேவை. முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். இல. 1351, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1351

றேயன் நைலோன்புடவை தொழிற்சாலைக்கு தானுகவும், பாதி தானுகவும் இயங்கும் சக்தியுடைய தறியில் வேலை செய்வதற்கு நெசவாளர்கள் தேவை. தராதரம்: கைத்தறி நெசவில் தராதரப்பத்திரம். ஐந்தடிக்கு மேல் உயரம். பெண்கள் மாத்திரமே தேவைப்படுகின்றனர். விண்ணப்பதாரர்கள் தொழிற்சாலையிலிருந்து 1 மைல் சுற்றளவிற்குள் வசிக்க ஆயத்தமாக இருக்க வேண்டும். கடிதம் மூலம் ஜவ்வர்ஜீ பிறதர்ஸ், 135, மீரோரமுலரோட், வெல்லம்பிட்டியா, கொழும்பு என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். 1338

கைத்தறியில் தேர்ச்சி பெற்ற பெண்களும், தேர்ச்சி பெறவிரும்பும் பெண்களும் கடிதமூலம் விண்ணப்பிக்கவும். ''சோபனு'' இன்டஸ்றீஸ், 12 மணிக்கூடு வீதி, யாழ்ப்பாணம். 1200

கைத்தறி நெசவு வேலையில் பயிற்சியுள்ள பெண்கள் தேவை. அனுபவம் குறிப்பிட்டு 10-11-65-க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 1350 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1350

ஸ்ரோர் கீப்பராகக் கடமைபுரிவதற்கு அனுபவமுள்ள ஒருவர் தேவை. டிப்போசிட் பணம் ரொக்கமாக ரூபா 2000/- உடன் செலுத்தக்கூடியவர் 11-11-65-க்கு முன் விண்ணப்பிக்கவும். இல. 1352, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1352

## தொழிற்சாலை மசோதா

கொழும்பு, ஞாயிறு

தொழிற்சாலை மசோதாவிற்குக் கொண்டுவரப்பட்டுள்ள திருத்தங்களை சிபார்சு செய்வதற்குவிசேஷ கமிட்டி ஒன்றை தொழில் மந்திரி விரைவில் நியமிக்கவிருக்கிறார்.

தொழிற்சாலையிலுள்ள நிலைமைக்கு எதிராகக் கூறப்பட்டுள்ள புகார்களை விசாரணைசெய்வதற்காக மேலும் பல தொழிற்சாலை இன்ஸ்பெக்டர்களை நியமிக்க மந்திரி நடவடிக்கை எடுத்து வருகிறார்.





# சைலால்

முகப்பரு, சொறிசிரங்கு கரப்பான், கக்கூஸ்பத்து, வெட்டுக்காயம், வேனல் கட்டி, தீப்பட்டபுண், சேத்துப்புண், பித்தவெடிப்பு முதலிய சரும வியாதிகளைக் குணப்படுத்துகிறது. துணிகளில் கறைபிடிக்காது

தயாரிப்பவர்கள்
ராதா புறடக்ஸ்

விநியோகஸ்தர்:-
எஸ். சுப்பிரமணியம் அன் கோ
போன்: 541. 53, கே. கே. எஸ். றேட், யாழ்ப்பாணம். 160, செட்டியார் தெரு, கொழும்பு.

# ராஜஸ்தானில் யுத்த அறிகுறி?

## இரு முனைகளில் பாக். தாக்குதல் ஆரம்பம்

லண்டன், நவ. 6

ராஜஸ்தானில்சில எல்லைப்புறங்களிலிருந்து ஊடுருவல்காரர்கள் அனைவரும் விரட்டப்பட்டுவிட்டதாக இந்தியா அறிவித்துள்ளது. அதே நேரத்தில் ராஜஸ்தானின் வனுந்தரப்பகுதிகளில் இந்தியத்துருப்புகளுக்கும் பாகிஸ்தான் துடுப்புகளுக்குமிடையே ஓரளவு கடுமையான சண்டை ஆரம்பித்திருப்பதாக செய்திகள் கூறுகின்றன.

பாகிஸ்தான் துருப்புகள் போர் நிறுத்தத்தை அதிகமாக மீறிவருவதாகச் செய்திகள் கூறுகின்றன.

நேற்று ஒரு பகுதியில் இந்திய-பாகிஸ்தான் துடுப்புகளுக்கிடையே நான்குமணி நேர கடுமையான சண்டை நடைபெற்றது. ஐ. நா. பார்வையாளர்கள் இரண்டு தடவைகள் குறுக்கிட்டதைத் தொடர்ந்து சண்டை சிறிதுநேரம் நின்றது. பாகிஸ்தான் விமானங்கள் மூன்று தடவை நேற்று இந்திய பிரதேசத்தில் பறந்ததாக புகார் செய்யப்பட்டுள்ளது.

ராஜஸ்தானில் இரு முனைகளில் பாகிஸ்தான் சுடத்தொடங்கியிருக்கிறதென்றும் இயந்திரத் துப்பாக்கிகள், பீரங்கிகள், நடுத்தர டாங்கிகள்மூலம் பாக். துருப்புகள் தாக்கி வருவதாகவும் இந்தியா எதிர்த்தாக்குதல் நடத்திவருவதாகவும் இங்கு கிடைக்கும் கடைசிச்செய்திகள் கூறுகின்றன.


REGAL—JAFFNA
NOW SHOWING!
TONY RUSSEL, HELGALINE
in
The Secret 7
(M G M's Scope-Eastman Color


### இங்கே இல்லை

பளை, சனி

பச்சிலைப்பள்ளிப் பகுதிப் பலநோக்கச் சங்கங்களில் கடந்த இரு வாரமாக, உருளைக்கிழங்கு புளி, பயறு மல்லி முதலான உபஉணவுப் பொருள்களுக்குப் பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. புளி, பயறு, கிழங்கு முதலியன அறவே கிடையாது இதனால் இப்பகுதி மக்கள் தமக்குத் தேவையான உபஉணவுப் பொருட்களைப் பெறமுடியாதிருப்பதாக அறியப்படுகிறது ஆனால் இவற்றில் ஒருசில பொருட்கள் கள்ளச்சந்தையில்கூடிய விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக அறியவருகிறது

### சேர் பொன். இராமநாதன்கழகம்

கொழும்பு, சனி

''சேர் பொன். இராமநாதன் அறிவும், நீதிக்காகப் போராடும் அஞ்சா நெஞ்சமும் உடைய ஒரு மாபெரும் தலைவராக விளங்கினார். சிங்கள மக்களாலும், தமிழ் மக்களாலும் ஒரு முகமான உரிமை பாராட்டி நேசிக்கப்பட்ட அரசியல் தலைவர். அவரைப்போல் பிறிதொருவர் இதுவரை தோன்றியதில்லை. மேற்கின் விஞ்ஞானமும் கிழக்கின் ஆத்மஞானமும் இரண்டறக் கலந்த ஒரு திருவுருவமாக அவர் வாழ்ந்தார். அதனால் அவர் இந்த நாட்டுக்கு ஒரு உதாரண புருஷரானார்'' என்று கொழும்புசேர் பொன். இராமநாதன் கழகத்தின் புதிய தலைவர் திரு எஸ். சோமசுந்தரம் கூறினார்.

மேற்படி கழகத்தின் கூட்டம் கொழும்பு ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் காரியாலய மண்டபத்தில் நடைபெற்றது. புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள்: திருவாளர்கள்; த. நீதிராசா ஜே பி., என். இரத்தினசபாபதி, வி. சண்முகலிங்கம். தலைவர்: எஸ். சோமசுந்தரம். உபதலைவர்கள்: திரு. அருள்தியாகராஜா, திரு, வ. நடராஜா, செயலாளர்: என். சின்னையா. பொருளாளர்: எம். ஆசீர்வாதம். நிர்வாகசபையினர்: திருவாளர்கள். பி. கதிரவேலு ஆச்சாரி எம். எம். ஸி., எஸ். இலங்கைநாயகம், எஸ். கே. சுந்தரம் பிள்ளை, கே. டி. ஐயாத்துரை, ஜனாப் கே. ஏ. முகமது, ஜனாப் எஸ். எச். பலீல், திரு. ஏ. துரையப்பா.

நவம்பர் 28-ம்திகதி சேர். பொன். இராமநாதன் அவர்களுடைய ஞாபகார்த்த விழாவை கொழும்பில் கொண்டாடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.


கிங்ஸலி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜயா மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி) ராஜ் (நீர்கொழும்பு)
தீவொளி (நுவரேலியா) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2, 6, 9-30 மணிக்கு
தென்னாட்டில் 30 வாரங்களுக்குமேல் ஓடி திரைப்பட வரலாற்றில் புதிய சாதனையை ஏற்படுத்தியிருக்கும் மகத்தான வெற்றிச் சித்திரம்!
''நான் ஆணையிட்டால்—அது நடந்துவிட்டால்—இங்கு ஏழைகள் வேதனைப் படமாட்டார்''
எம். ஜி ஆர். — சரோஜாதேவி
(இருவேடங்களில்)
ரங்கராவ், நம்பியார், தங்கவேலு, ரத்னா, பண்டரிபாய், நாகேஷ், மாதவி, விஜயலக்ஷ்மி
நடித்த



விஜயா கம்பைன்ஸ்
எங்கவீட்டுப் பிள்ளை
(ஈஸ்மென்கலர்)


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேல்வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

### ஜயாறன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டங்கள். நமது ஈழத்தின் இயற்கை எழில் மெய்மறக்கச்செய்தது. இதைப் பார்த்த பம்பாய் மேயர் மாதவன், ஈழத்தை ''வீனஸ்'' (அழகுத் தேவதை) என்று கூறியதில் வியப்பில்லை.

ஃ ஃ ஃ

சுமார் பத்து வருடங்களுக்கு முன்பாக இந்த நகரசபையிலேயே கமிஷனராக இருந்தவர் கோபல்லவா. இப்போது கவர்னர் ஜெனரலென்ற முறையில் விழாவுக்கு வந்திருந்து நகரசபையை வாழ்த்துகையில் அவர் உணர்ச்சி எப்படி இருந்திருக்கும் சென்ற ஒரு நூற்றாண்டிலே எவ்வளவோ முன்னேற்றங்களிருப்பினும். இன்னும் நகரமக்களுக்குச் செய்யவேண்டியிருப்பது அதிகமுண்டென்று அறிவுறுத்தினார் அவர் சுதந்தியக்கட்சி ஆட்சியிலிருக்கையில் கவர்னர் ஜெனரலான அவர், தேசியஅரசாங்க காலத்திலும் அதே பதவியை வகித்து இவ்வளவு கௌரவங்களைப் பெறுவது இங்கு ஜனநாயகம் சுமுகமாக நடப்பதற்கு மற்றோர் அத்தாட்சி.

கவர்னர்ஜெனரல் பேசிக் கொண்டிருக்கையில் மாலைவெயில் பளிச்சென்று அவர் மீது பட்டது. நல்லவேளை மழை வரவில்லை என்று நினைத்தேன். ஆனால் பம்பாய் மேயர் பேசிக்கொண்டிருக்கையில் எங்கிருந்தோ மழை 'படபட' வென்று வந்துவிட்டது. கூட்டத்திலிருந்தவர்கள் எல்லோரும் எழுந்து பாதுகாப்புக்காக மேடை மீதும் ஏறிவிட்டார்கள்.

அழகு சொட்டுவதாகச் சொல்லுவதுண்டல்லவா? அது சொட்டுவதைப் பார்த்தேன்! முகத்தில் அழகுக்காகப் பூசிக்கொண்டிருந்த பவுடரெல்லாம் மழைநீரில் கரைந்து அந்த அழகு சொட்டிக் கொண்டிருந்தது. பாவம்!

ஏன் இந்த மழை வந்து இப்படிக் குழப்பவேண்டும்? திருஷ்டிபரிகாரம் என்றார் ஓரன்பர். கொழும்பிலே வேறொரு பகுதியில்மழையே பெய்யவில்லை. நகரமண்டபத்தின் பக்கத்தில் தான் நல்ல மழை. பலரும் நனைந்துவிட்டோம்.

ஃ ஃ ஃ

இந்த விழாவில் மற்றும் இரு பெரிய குறைகள். பிரதமமந்திரி டட்லி இங்கு வந்துபேசுவதாக இருந்தது. திடீரென்று சுகக்கேடு ஏற்பட்டதால் அவர் வரமுடியாமற்போனது, அங்கு பலருக்கும் ஏமாற்றம். ஏன் அவருக்கு இப்படி அடிக்கடி வரவேண்டும்?

இவ் விழாவிலே சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் தான் பேச்சுகள் எல்லாம் இருந்தன. மேயர், கவர்னர்ஜெனரல், ஜே. ஆர். இவர்கள் இரு மொழிகளிலும் பேசினர். மந்திரி திருச்செல்வம் ஆங்கிலத்தில். கொழும்பு நகரிலே சுமார் பாதிப்பேர் தமிழ் பேசும்மக்கள் என்றாலும் அங்கு விழாவிலே மருந்துக்குக்கூட ஒரு தமிழ்ச்சொல்லுக்கும் இடமளிக்கவில்லை.

எலிஸபெத் ராணி வந்திருக்கையில், நகரசபை வரவேற்பில் மூன்று மொழிகளும் இடம்பெற்றன. அப்போது ருத்ரா அவர்கள் மேயராக இருந்தார்கள். மந்திரி திருச்செல்வமாவது சில வார்த்தைகள் தமிழில் பேசியிருக்கலாம். என்ன செய்வது! தமிழுக்கு இடமளிக்காததை ஆட்சேபித்தே வருணன் வந்து இப்படிக் குழப்பிவிட்டாரா?

ஃ ஃ ஃ

பின்னர் நெருப்பணைக்கும் படையினர் பல சாகசச்செயல்களைச்செய்து காட்டியபோது மழையும் நின்று விழாவும் இனிது முடிந்தது.

கராச்சி மேயர், கராச்சி நகர கௌரவமான வெள்ளிச்சாவியை கொழும்பு மேயருக்கு அளித்து, பாகிஸ்தானின் நல்லுணர்ச்சியையும் வாழ்த்தையும் கச்சிதமாகத் தெரிவித்தார். மாஸ்கோ உதவி மேயரும் ரஷ்ய மொழியில் பேசியதை ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் மொழிபெயர்த்தனர். அவரும் பரிசில் வழங்கினார். பம்பாய் மேயர் ஏதாவது அன்பளிப்பு செய்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். மறந்துவிட்டார் போலும்.

அல்லல் இல்லை அருவினை தானில்லை
மல்கு வெண்பிறை சூடும் மணாளனார்
செல்வனார்திருவேட்களம் கைதொழ
வல்லராகில் வழி யது காண்மினே.
— அப்பர் சுவாமிகள்.

### இலக்கிய விழா

கிளிநொச்சி, திங்.

கிளிநொச்சி கிராம சபையின் ஆதரவில் நடைபெற்ற நேற்றைய இலக்கியவிழாவைக் கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் தொடக்கி வைத்தார்.

விழா தொடர்ந்து இன்றும் நடைபெறும்.

### எதிர்ப்பு . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வின் கொள்கையைக் கண்டித்தே இந்த இளைஞர்கள் இச்செயலில் இறங்கினர் அப்படியான குற்றங்களுக்கு 5 வருட சிறைத் தண்டனை அல்லது 10,000 டாலர்கள் அபராதம் விதித்த சட்டம் உண்டு. (ராய்ட்டர்)

### வருடாந்தப்போட்டி

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி ஆசிரியர்களுக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர்களுக்குமிடையே நடைபெறும் வருடாந்த உதைபந்தாட்டப்போட்டி, வியாழக்கிழமை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்

விக்டோரியாக் கல்லூரிக் கோஷ்டி வருமாறு:- இக் கோஷ்டியிலிருந்து தெரிவு நடைபெறும்.

திருவாளர்கள் ரி. ராஜசுந்தரம், ஸ். பத்மநாதன், எஸ். எஸ். இரத்தினசபாபதி, ஆர். கருணாநிதி, ரி. வேலாயுதம், எஸ். எஸ். பொன்னம்பலம், ஏ. எம். ஸ்பென்ஸர், என். ராமநாதன். என். தியாகராஜா, எஸ். சர்மா, வி. எம். விஜயரத்தினம், சிவகுருநாதன். ரி. சண்முகரத்தினம் வி. கே. தியாகராஜா; கே. கந்தையா, எஸ். ராமநாதன்.

### இடைத்தேர்தல்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நீர்வேலி கிராம சபை எட்டாம் வட்டாரத்துக்கான இடைத்தேர்தலில் எஸ். பஞ்சலிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவருக்கு 207 வாக்குகளும் எதிர்த்துப் போட்டியிட்ட திரு. என். இராசையாவுக்கு 159வாக்குகளும்கிடைத்தன

### நாட்டிலும் நகரிலும்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

கேதுதான் நாரதரா? அப்படியானால் அவரது வருகை நன்மைக்கல்ல. ஏதோ பொல்லாத துர்க்குறி என்று புராணங்களை நம்புபவர்கள் சொல்வார்கள்.

ஐப்பசி இருபதாகியும் யாழ்ப்பாணத்தில் மாரி பெய்யவில்லை, வெள்ளம் போடவில்லை. வளர்ந்த பயிரை விளைவிக்க தண்ணீர் இல்லை. இதைவிட வேறென்ன துர்க்குறி வேண்டும் என்று கேட்கிறார் கமக்காரர்.

--''வழிப்போக்கன்''